# கம்ப இராமாயணத்தில் மேலாண்மைச் சிந்தனைகள்

**தமிழ்ச்செம்மல் முனைவர் பா. வேலம்மாள்**
முதல்வர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி
கடையநல்லூர்

"எண்ணி எண்ணித் திட்டமிட்டு எழுதினானோ
எண்ணாமல் எங்கிருந்தோ கொட்டினானோ
புண்ணியத்தால் உடன் பிறந்த புலமைதானோ
போந்த பின்னர் ஆய்ந்தறிந்து புகன்றதாதோ" (நாமக்கல் கவிஞர்)

கம்பராமாயணம் ஒரு கல்விக் களஞ்சியம். ஒப்பில்லாக் காப்பியம் வடமொழியில் உள்ள வான்மீகி இராமாயணத்தை அடியொற்றி கம்பரால் தமிழில் இயற்றப்பட்டக் காப்பியம். பாலகாண்டம்,அயோத்திய காண்டம்,ஆரண்ய காண்டம், கிட்கிந்த காண்டம்.,சுந்தரக்காண்டம் யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உள்ளடக்கியது. மேலாண்மை என்பது தற்காலத்தில் ஏற்ப்பட்ட நவீன கருத்தாகும். ஒரு நிறுவனம் அடையவுள்ளக் குறிக்கோள்களை அடைவதற்காக குறிப்பிட்ட நிறுவனம் மேற்கொள்ளும் பல வகையான மேம்பாட்டு சிந்தனைகளை அந்தக் காலத்திலேயே கம்பன் எவ்வாறு தன் காப்பியத்தில் புகுத்தியுள்ளான் என்பதைக் காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

மேலாண்மை என்பது பணிபுரியும் பணியாளர்களை பல்வேறு வகையாலும் மேம்படுத்தி சுறுசுறுபாக்கி பணியாளர்களை நன்கு பணிபுரிய வைக்கும் ஒரு கலையாகும். நோக்கம் கூட்டு முயற்சி பொது இலக்கை அடைதல் என எல்லாவற்றையும் ஒருங்கிணைந்து வெற்றி பெறவைக்கும் ஒரு கலை என்பதால் மேலாண்மை உலகெங்கிலும் பயன்படுத்தப்படுகிறது. வணிகத்திற்கு மட்டுமின்றி எல்லா வகை விரிவாக்கங்களுக்கும் பயன்படும் ஒரு கலையே மேலாண்மை.

மேலாண்மை ஒரு துடிப்பு மிக்க தலைமையின் துடிப்பான செயல் முறையாக அறியப்படுகிறது. இதன் படி ஒரு நிறுவனத்தின் தலைமை அந்நிறுவனத்தின் பொருள் வளத்தையும் மனித வளத்தையும் முறையாகத் திட்டமிட்டு முழுத்திறனுடன் செம்மையாக இயங்க வைத்து அந்நிறுவனம் எண்ணியுள்ள குறிக்கோள்களை அடைய உதவும் நிலை. மேலாண்மையின் முக்கிய வளங்களாக மேலாண்மை தலைமையின் தலைமைப்பண்புகள்பணியாளர்களுக்கான ஆற்றல்கள் கருதப்படுகின்றன.

மேலாண்மை என்ற சொல் மிகவும் ஆழமானது மேலாண்மையை வரையறுக்கும் பொழுது சிலர் மனித நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதலை முக்கிய பணியாக வரையறுக்கப்பட்டுள்ளது. நமது சமுதாயமே ஒரு கூட்டு முயற்சியை அடிப்படையாகக்

கொண்டே இயங்குகிறது. அனைத்து தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் மத நிறுவனங்கள் வங்கிகள் காப்பீட்டு நிறுவனங்கள் போக்குவரத்து நிறுவனங்கள் மருத்துவமனைகள் நமது மத்தியமாநில அரசாங்கம் ஆகிய அனைத்துமே சமுதாய அமைப்பின் பல்வேறு செயற்பாட்டுக்கு அதன் குறிக்கோளை அடைய மேலாண்மை பயன்படுத்தப்படுகிறது. மேலாண்மை திறமையை வளர்ப்பதற்கு பணிபகுப்பு அதிகாரமும் பொறுப்பும் ஒழுக்கம் ஆணை இசைவு வழிகாட்டலில் இசைவு பொது நலனுக்காக தனிப்பட்டவர் கீழ் படிதல்பணியாளர் ஊதியம் பணிகளை மையப்படுத்துதல் வரையறுக்கப்பட்ட அதிகார வரிசை நேர்மை நெறி நிலையான பணிக்காலம் தன்முயற்சி ஒற்றுமையே பலன் (ஹென்றி பேயால்) என்று மேலாண்மைத் தத்துவங்கள் வரையறுக்கப்படுகின்றன. மேலும் எதிர்காலத்தை கணித்து சரியாகத் திட்டமிடல் செயலாக்கம் செய்தல் தலைமையேற்றல் ஒருங்கிணைத்தல் தட்டுப்படுதல் இதுதான் நிர்வாகவியலின் சிறப்பு.

மேலாண்மையின் மிக முக்கிய பண்பு 'தலைமைத்துவம்'. நாடோடிகளாக வாழ்ந்த மனிதன் உணவிற்காகப் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து சென்றனர். அவ்வாறு பிரிந்து செல்லும் குழுக்களை வழிநடத்தவும் வழிகாட்டவும் பல்வேறு திறமைகளும் குணநலங்களும் உடைய ஒருவன் சூழ்நிலை கருதி வெளிப்பட்டான். அவனே அந்த குழுவின் தலைவன் ஆவான். துங்கள் உணவிற்காக நிலங்களை கைப்பற்ற ஆரம்பித்தான்; இதுவே பின்னர் போராக உறுவெடுத்தது போரின் முடிவில் அரசு என்ற ஒரு அமைப்பு உருவானது அதற்கு ஒரு தலைவன் மன்னன் என்று அழைக்கப்பட்டான் இந்த தலைவனுக்கானப் தலைமைப் பண்புகளைக் கம்பன் உறுவாக்கி இருக்கும் விதம் அற்புதமானது.

ஒரு அரசியல் தலைவனுக்கு வேண்டிய தலைமைப் பண்புகளையெல்லாம் இராமன் கொண்டிருப்பதை கம்பன் எடுத்துரைக்கின்றார். உயர்நத எண்ணம் பொதுநலம் பேணுதல் அரவணைப்பு கருணை அவா புலடைக்கம் இன்சொல் தூய்மை முயற்சி சீர்மைவெற்றி நீத மண்ணில் உள்ள உயிர்களுக்கு எந்த வித ஊனும் நேராதவாறு பேணுதல் மக்கள் உயிரை தன் உடலில் வைத்து பாதுகாத்தல் குடிகளை ஓம்புதல் தாயகம் பேணுதல் என்று கூறுகின்றார்.

தாய் ஒக்கும் அன்பில் தவம் ஒக்கும் நலம் பயப்பில்
சேய் ஒக்கும் முன்னின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால்
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான்(அரசியல் - 4)

இராமன் இளவரசானாயிருக்கும் பொழுதே மக்களை நேசிக்கின்றவனாக நெருங்கி பழகக் கூடியவனாகவும் இருக்கிறான் அவன் வீதியில் செல்லும் பொழுது எதிரில் வரும் மக்களை

''முதிர் தரு கருணையின் முக மலர் ஒளிர
எது வினை? இடர் இலை இனிதின்றும்
மனையும்? மதிதரும் குமரரும் வலியர் (தொல் - 31)

என்று கேட்பது அவனை தலைமைத்துவ பண்பின் நிறைவைக் காட்டுகிறது.

இராமனின் பதினாங்கு ஆண்டு வனவாசம் அவனை சிறந்த அரசியல் தலைவனாக உருவாவதற்கு பயிற்சிக் காலமாய் அமைகின்றது. சாமான்ய மக்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்களைத் தானே அனுபவித்து அறிகின்றான் மனிதன் எவ்வாறு ஏன் எதனால் தவறு செய்கிறான் என்பதை தெரிந்து கொள்கிறான். வசிட்ட முனிவர் போதித்திருந்தாலும் அங்கு

உணர முடியாத அரிய பாடங்களை இராமன் அனுபவ அறிவால் உணர்ந்ததோடு அக்கிரிவனுக்கும் பாடம் போதித்தான் சிறந்த தலைவனாக விரும்புகிறன் உடலில் ஒரு சில ஆண்டுகளாவது போராடி பட்டறிவால் பாடம் பெற வேண்டும் என்று கம்பன் கூறுகின்றார்.

மேலாண்மையின் முக்கியப் பண்பால் ஒன்று பணிப் படுப்பு மற்றும் அதிகாரத்தையும் பொறுப்பையும் வழங்குதல் திட்டமிடல். சீதையினைத்தேடும் முயல்வில் வானரங்கள் ஈடுபடும் செயலினை அவர்கள் எவ்விதம் செய்தனர் என்பதைப்பார்த்தால் செய்ய வேண்டியதில் தெளிவு சீதையினை தென்திசையில் சென்று தேடவேண்டும் என்பதில் இருந்து. யாருக்கு என்ன வேலை தரவேண்டுமோ அதனைச் சரியாகப் பிரித்தருதல் அனுமனை அதற்குத் தலைவனாகத் தேர்வு செய்தல் தேர்வு செய்த பின்னர் அந்த வேலையைச் செவ்வனே செய்திடத் தேவையான அனைத்தும் தருதல் இரண்டு வெள்ளப்படை தருதல் திட்டமிடும் போதே இறுதி இலக்கினை எட்ட முப்பது நாள் கெடுவாய்க் குறித்தல் பணிகள் சரிவர நடக்கிறதா என்பதை கண்காணிக்கச் செய்தல் என அனைத்தையும் சுக்ரீவன் வாயிலாக நிர்வாகி கம்பன் செய்கிறான்.

வெற்றி வாரை வெள்ளம் இரண்டொடும்
சுற்றி ஒடித்துருவி ஒரு மதி
முற்றுறாத முன் முற்றுதிர் இவ்விடை
சொற்ற வாகையினீர் எனக் கூறினார். (கிட்கிந்தா காண்டம்)

ஒரு பணியினைச் சாரியாக நேரத்தில் சரியான நபர்களைக் கொண்டு செவ்வனே செய்திடும் கலையினைத் தான் மேலாண்மை கற்றுத் தருகிறது. ஆதனால் வரும் சிக்கல்களையும் அது எதிர்பார்க்காமல் இல்லை. ஆனால் தலைமைக்கு அந்தச் சிக்கல்களைத் தீர்க்கும் திறன் கண்டிப்பாய் இருந்தால் அவசியம். ஒரு பிரச்சனைக்கு முடிவு எடுப்பதற்கு ஆதாரமாய் ஆவணங்களும் பிறர் சாட்சியங்களும் மிக மிக முக்கியம்.

சுந்திர காண்டத்தில் சுளாமணிப் படலத்தில் அனுமன் சீதையைப் பார்த்தவுடன் தான் அசோகவனத்தில் கற்போடு இருப்பதையும் இராவணன் தன்னை கவர்ந்து வரும் போது தொடாமல் தூக்கி வந்ததையும் இராமன் சீதையின் மாண்பை அறியும் வகையில் தன் சீரிய சொற்களால் ‘கண்டேன் சீதையை’ கற்பினுக்கு அணியை என்று ஒரு சிறந்த மேலாண்மைத திறனாளனாகப் பேசுகின்றார்.

மனித உறவுகளைப் பேணுதல் என்பது மேலாண்மையின் முக்கிய கருத்து. அனைவரையும் பேணி ஒருங்கிணைத்து நடத்தப்படும் நிறுவனமே வெற்றி பெறும். சூரிய குலத்தில் உதித்த இராமன்,

குகனொடும் ஐவர் ஆனோம்; முன்பு பின் குன்று ஆழ்வான்
மகனோடும் அறுவரானேம் எம்முழை அன்பின் வந்த
அகமைர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்
புகல் அருங்கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் றுந்தை

என்று தன் செயல்பாடு நிறைவேற இராமன் வேடர் குலத்தலைவன் குகன் வாரை அரசன் சுக்கிரிவன் அரக்கர் குல வீடணன் என்று அனைவரையும் தன்னோடு இணைத்து கொண்ட காரணத்தினால் இறுதியில் வெற்றி பெற்றான்.

மேலாண்மையின் மற்றொரு சிறப்பு தலைமையின் பேச்சாற்றல் வாலியை மறைந் திருந்து இராமன் தாக்குகிறான். அதனை அறிந்தவாலி இல்லறம் துறந்த நம்பி எம்மனோர்க்காக இப்போது தன் வில்லறத்தையும் துறந்து தூயவன் தசர தன்மைந்தனா நீ? புரதனின் தமையனா நீ என்று கேள்வி கேட்கிறான்; அவனிடம் எப்படி பேசினால் அவன் மனம் அமைதியுறும் என்று நினைத்த இராமன் உடனே உளவியல் ரீதியாக வாலியிடம் பேசுகின்றான். உன் தம்பியிடம் சிறிதும் குற்றமில்லை என்று உணர்ந்தும் அவனைக் சொல்ல நினைத்தாய் சிறிதும் இரங்கவில்ல அவன் மனைவியை விரும்பினாய் என்னிடம் அடைக்கலம் வந்த சுக்கீரீவனுக்காக உன் உயிரைதான் எடுத்தேன். மேலும் நீ விலங்காசவே இருந்தாலும் ஒழுக்க நெறியினை உணர்ந்து அவ்வழியே ஒழுகினால் மட்டுமே மதிக்கப்படுவாய் என்று தன் பக்க நியாங்களையும் தர்மங்களையும் இராமன் எடுத்துரைத்து வாலி இறுதியில் தன் தவறை உணர்ந்து அறமே உருவாக நிற்கும் உன்னை என் கண்களால் கண்ட பிறகு அறம் வேறு உன் அம்பு வேறு அல்ல என்று மனமாற்றம் அடைந்தான் இதுவே ஒரு தலைவனுக்கு வேண்டிய முக்கிய பண்பு.

ஒவ்வொறு நிறுவனத்தின் தங்கு தடையற்ற பணிக்கு ஒழுக்கம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஒழுக்கத்தை நிர்வகிக்க மிகமுக்கிய பண்பு ஆணைகளல் இசைவு(Unity of command). துலைமையின் ஆணையினை அப்படியே ஏற்று கொள்வது இல்லையென்றால் தேவையில்லாத குழப்பம் உறுதியின்மை தொல்லை போன்றவை ஏற்படும்.

தனிமனித ஒழுக்கம் என்பதில் ராமன் பதினொன்கு ஆண்டுகள் தந்தைக்களித்த வாக்கிற்காhக சீதையுடறும் இலக்கு அனுமனும் வளம் சென்றான். இராமனுடைய பறன் மனைநோக்கா ஒழுக்கம் பற்றி குறிப்பாக வனம் புகுந்த பின் இராமனிடம் பணிவும் துணிவும் இயல்பினாலும்ää பயல்வினாலும் குடிபுகுகின்றன. தண்டக வளத்து முனிவர்களைக் காப்பதாய் உறுதி அளிக்கும் சொற்களில் தியாகம் சுடர் விடுகிறது.

இறந்து போகினும் நன்று இது அல்லது
பிறந்து யான்பெறும் பேறு என்பது யாவரோ?

என்றும்

‘யாவர்க்காயினும் எளியவர்க் காயினும்
சுhவம் பெற்றவரே தகை வான் உறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார்’

என்றும் பேசும் போது அவனுடைய மனிதப் பண்பு முதிர்ச்சி பெற்று விடுவதை பார்க்கிறோம்.

கிட்கிந்தா காண்டம் இந்த மானுடப் பண்புக்கு மகுடம் வைக்கின்றது.

‘வேறுள குழுவை எல்லாம்
மானுடம் செவன்ற தம்மா’

என்று இராமனைப் பார்த்த முதல் பார்வையிலேயே சுக்ரீவன் தெளிவுற உணர்ந்து மனதுள் மொழிகிறான்.

இராமன் படைக்குள் இராவணன் ஒற்றர்கள் நுழைந்து விடுகிறார்கள். விழிப்பு மிக்க வீடணானால் அடையாளம் காணப்படுகிறார்கள். அவர்களை அடித்து மாணைக் கொடியால் கட்டி இழுத்து வரப்படுகிறார்கள். தாக்குதலால் ஒற்றர்வாய்வழிக் குருதி சோர்கிறது. அவர்களைக் கண்ட இராமன் இரக்கம் கொள்கிறான் 'துன்புறுத்தாதீர்' என்று தடைவிதிக்கிறான்

தூம் பிழை செய்தாரேனும்
தஞ்சம் என்று அடைந்தார் தம்மை
நாம் பிழை செய்யலாமோ?
நலியலீர் விடுதீர் என்றான்

கம்ப இராமயணம் முழுக்க கவித்துவம் நிரம்பி வழிந்தாலும் இந்த காலத்தில் கடைபிடிக்கும் மேலாண்மை கருத்துகள் வேறு நிலையில் வளர்ச்சியடைந்தாலும் மேலாண்மை சிந்தனைகள் என்ற தனி துறை அல்லாத நிலையில் கம்பனின் காப்பியத்தில் காணப்படும் சில இன்றைய மேலாண்மை கூறும் கருத்துக்களை கம்பன் கைக்கொண்டு சிறந்த மேலாண்மைத் திறனாளனாகத் திகழ்கின்றான். பல நூற்றூண்டுகள் கடந்தும் கம்பனின் மேலாண்மை சமூகத்தை நெறிப்படுத்த வாழ்ந்து கொண்டிருக்கிறது. இன்று நிர்வாகவியலில் பயிற்சி அளிக்கப்பட்டாலும் அதன் அடிப்படையான கருத்துகளை தமிழர்கள் முன்னரே அறிந்திருந்தனர் என்பதை கம்பராமயணம் மூலம் பதிவு செய்வதே இக்கட்டுரையின்நோக்கம்.